**<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,</u>**

**<u>விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்</u>**

**OS.No: 22/2015** **நாள் 27.11.2025.**

**வாசா.1, திரு.குருசாமி**

**வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 3, 4, 16 முதல் 18 எதிர்வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்–**

பிராது 1 வதுதபசில் சொத்தான கோவிலுக்கு அசையா சொத்துக்கள் உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி பிராது 1ம் அயிட்ட சொத்துகள் குறித்த ஆவணங்களை பராமரிக்கின்றோம். பிராது 1ம் அயிட்ட சொத்துக்கள் குறித்த ஆவணங்களை நீதிமன்றத்தில்நான் தாக்கல் செய்தால் பிராது 2ம் அயிட்ட சொத்தானது கோவிலுக்கு பாத்தியம் என்பதை காண்பிக்கும் என்று சொன்னால் அது சரிதான். பிராது 2ம் அயிட்ட சொத்துக்கு மேற்கே தென்வடல் சாலை உள்ளது என்றும் அந்த தென்வடல் சாலையும், பிராது 2ம் அயிட்ட சொத்தானதும் சமதளத்தில் தான் உள்ளது என்று சொன்னால் அது சரிதான். பிராது 1ம் தபசில் திருக்கோவிலுக்கான முகப்பு வளைவானது (ஆர்ச்) பிராது 2ம் அயிட்ட சொத்தில் தான் அமைத்துள்ளோம் என்றால் அது சரிதான். பிராது 2ம்அயிட்ட சொத்தில் நாங்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளோம் என்றும் அந்த ஆக்கிரமிப்பு செய்யவேண்டும் வாசாஆ.14 அறிவிப்பு இராஜபாளையம் நகராட்சியானது எங்களுக்கு அனுப்பியிருந்தது என்றால் அது சரிதான். வாசாஆ.14 அறிவிப்பு வந்த பின்பு தான் நாங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். பிராது 2ம் அயிட்ட சொத்தில் எங்களுக்கு எந்தவிதமான பாத்தியமும், உரிமையும்இல்லை என்றும் பிராது 2ம் அயிட்ட சொத்தானது வழக்கில் உள்ள 14ம் எதிர்வாதியான இராஜபாளையம் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது என்று சொன்னால் அது சரியல்ல. நாங்கள் தற்போது வரையிலும் நகராட்சிக்கு வரியை செலுத்தி வருகிறேம். பிராது 2ம் அயிட்ட சொத்தானது அரசுக்கு பாத்தியப்பட்டது என்பதாலும் நாங்கள் இந்த வழக்கில் மாவட்ட ஆட்சியர்(தமிழ்நாடு அரசுக்காக) சேர்க்காததால் இந்த வழக்கானது அவசிய தரப்பினரை சேர்க்காத காரணத்திற்காக வேண்டி தள்ளுபடி செய்யப்படவேண்டிது என்றால் அதுசரியல்ல. 3, 4, 16 முதல் 18 எதிர்வாதிகள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட இடத்தில் தான் கட்டிடம் கட்டி அனுபவித்து வருகிறார்கள் என்றும் அவர்கள் ஆக்கிமிப்பாளர்கள் அல்ல என்றால் அது சரியல்ல. பிராது 2ம் அயிட்ட சொத்தானது எங்களுக்கு பாத்தியம் இல்லை என்பதால் அதை பொறுத்து 3, 4, 16 முதல் 18 எதிர்வாதிகளுக்கு எதிராக நாங்கள் கோரும் பரிகாரம் எங்களுக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் அது சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை – 15ம் எதிர்வாதி தரப்பில்</u>**

4ம் எதிர்வாதியான மகாலிங்கம் என்பவருக்கு எப்போது மின் இணைப்பு கொடுத்தார்கள் என்று கேட்டால் எனக்கு ஞாபகமில்லை. 4ம் எதிர்வாதியான மகாலிங்கம் என்பவருக்கு சுமார் 35 ஆண்டுக்கு முன்பாகவே மின் இணைப்பு கொடுக்கப்பட்டு விட்டதுஎன்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி 4ம் எதிர்வாதிக்கான மின்சார வயர் பிராது 2ம் அயிட்ட சொத்துக்கு மேல்புறமாக தான் செல்கிறது என்று சொன்னால்

அப்படியில்லை பிராது 2ம் அயிட்ட சொத்துக்கு மேல்பக்கம் வழியாக தான் செல்கிறது. அந்த மின்சார வயரானது அந்த இடத்திற்கு மேலே தான் செல்கிறது என்றும் அது யாருக்கும் இடஞ்சல் இல்லை என்று சொன்னால் அது சரிதான். அவ்வாறு மின் வயர் கொண்டு செல்லும்போது எனக்கு முன்பாக இருந்த நிர்வாகஸ்தர்கள் யாரும் ஆட்சேபனை செய்யவில்லை என்று சொன்னால் ஆட்சேபனை செய்துள்ளார்கள். அவ்வாறான ஆட்சேபனை நகலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாசாஆ.28 யை தாக்கல் செய்துள்ளேன். அந்த மின்இணைப்பு வயரை எடுக்க சொல்லி எங்கள் தரப்பில் அந்த நேரத்தில் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் அந்த நேரத்தில் எனக்கு முன்பு இருந்தவர்கள் வழக்கை தாக்கல் செய்தாரர்களா என்று எனக்கு தெரியாது. 6ம் எதிர்வாதியான செல்வகுமார் என்பவருக்கு 1986ம் ஆண்டே மின்இணைப்பு கொடுக்கப்பட்டது என்றால் கொடுக்கப்பட்டது .அப்போதும் நாங்கள் ஆட்சேபனையை தெரிவித்துள்ளோம். நாங்கள்ஆட்சேபனை செய்யப்பட்டதாக சொல்லப்படும் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அந்த மின்வயரை அப்புறப்படுத்தவேண்டி வழக்கு எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தனலட்சுமி என்பவருக்கும் பிராது 2ம் தபசில் சொத்தின் வழியாக தான் மின்சார வயர் செல்கிறது என்றும்அதையும் நாங்கள் ஆட்சேபிக்கவில்லை என்றால் மின் வயர் செல்கிறது நாங்கள் அப்போதும் ஆட்சேபனை செய்துள்ளோம். மின் வயரை அகற்ற வேண்டி நாங்கள் தனலட்சுமி மீது வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிராது 2ம் அயிட்ட சொத்தை பொறுத்து அரசாங்கத்தால் பொட்டல் தெரு என்று நிலவகைப்பாடு செய்யப்பட்டவிபரம் எனக்கு தெரியுமா என்று கேட்டால் நாங்கள்தற்போது வரையிலும் தீர்வையை செலுத்தி வருகிறோம் பொட்டல் தெரு என்று வகைப்பாடு செய்யவில்லை நாங்கள் எத்தனை ஆண்டு காலமாக தீர்வை செலுத்தி வருகிறோம் என்று கேட்டால் 50 ஆண்டு காலமாக செலுத்தி வருகிறோம்.நாங்கள் தீர்வை ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்று கேட்டால் தாக்கல் செய்துள்ளோம். (வாசாஆ.11). பிராது 2ம் தபசில் சொத்தின் கீழே குடிநீர் குழாய் நகராட்சியால் பதிக்கப்பட்டு பொதுமக்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என்று சொன்னால் அத்தகைய குடுநீர் குழாய் நகராட்சியால் பதிக்கப்பட்டு பொதுமக்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது நாங்கள் அப்போதும் ஆட்சேபனை தெரிவித்தோம். அப்போது நகராட்சிக்கு நாங்கள் ஆட்சேபனை தெரிவித்து அறிவிப்பு எதையும் அனுப்பியுள்ளோமா என்று கேட்டால் அறிவிப்பு அனுப்பியுள்ளோம். (வாசாஆ.25) குடிநீர்குழாய் பதிக்கப்பட்டு எப்போது நாங்கள் ஆட்சேபனையை தெரிவித்தோம் என்று கேட்டால் நகராட்சியால் குடிநீர்குழாய் பதிக்கப்பட்டு 6 ஆண்டுக்கு பின்பு ஆட்சேபனையை தெரிவித்தோம். பிராது 2ம் அயிட்ட சொத்தானது அரசுக்கு பாத்தியப்பட்டு பின்பு 14ம் எதிர்வாதியான இராஜபாளையம் நகராட்சிக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் அது சரியல்ல. எனவே இராஜபாளையம் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட சொத்து வழியாக மின் வயரை

கொண்டு செல்வதை எங்களால் ஆட்சேபிக்க முடியாது என்று சொன்னால் அது சரியல்ல. 15ம் எதிர்வாதியை பொறுத்து நாங்கள் கோரியுள்ள செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் எங்களுக்கு கிடைக்கதக்கதல்ல என்று சொன்னால் அதுசரியல்ல. மின் இணைப்பானது 35 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தே செல்கிறது என்பதால் எங்கள் வழக்கானது காலாவதி தோசத்தால் பாதிக்கப்பட்டது என்றால் அது சரியல்ல.

**(குறுக்கு விசாரணை 14ம் எதிர்வாதி தரப்பில் வேண்டுதல் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.)**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 27th day of November 2025.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.